


● பா.ராகவன்

பொதுவாக யுத்தங்கள் காலை ஒன்பது மணிக்கு ஆபீஸ் புறப்படுகிற நேரத்தில் ஆரம்பிக்கப்படுவதில்லை. நள்ளிரவில் தொடங்குவார்கள். அல்லது அதிகாலை.

ஒரு மாறுதலை உத்தேசித்தோ என்னவோ, 12 ஜூலை, 2006 அன்று ஆரம்பித்த இஸ்ரேல் ஹிஸ்புல்லா போர், லெபனான் நேரப்படி காலை சரியாக 9.05-க்கு முதல் குண்டுவெடிப்புடன் தொடங்கியது.

நல்ல சூரிய வெளிச்சமும் முந்தைய தினத்து இரவின் பதினான்கு டிகிரி சென்டிகிரேடு குளிரின் மிச்சமும் பிராந்தியத்தில் படர்ந்திருந்தன. லெபனான் - இஸ்ரேல் எல்லைப் பகுதி என்பது கரடுமுரடான மலைகள் நிறைந்த இடம். கூர்மையான, பாறைகளும் மேலே படர்ந்து உருகிக்கொண்டிருக்கும் பனியும் சடாரென்று திருப்பங்களில் விரியும் பசுங்காடுகளும் எந்த ஒரு தமிழ் சினிமா கனவுக் காட்சிகளுக்கும் பொருத்தமானவை. ஆனால் டூயட் பாடிக்கொண்டிருக்கும் நேரத்தில், ராக்கெட்டுகள் வந்து மோதினால் யாரும் பொறுப்பல்ல.

அந்தப் பிராந்தியத்தின் இரவு நேரக் குளிருக்கும் பகல் நேரச் சுட்டெரிக்கும் வெயிலுக்கும் எப்படிப் பொருத்தமில்லையோ, அப்படித்தான் அந்த இடத்தின் அழகுக்கும், நிகழும் சம்பவங்களுக்கும்கூட.

உண்மையில், அன்றைக்கு ஒரு யுத்தம் தொடங்குவதற்கான மிகச்சிறு அறிகுறிகூட இல்லை. மலைப்பகுதி வழக்கம்போல் அமைதியாக இருந்தது. வடக்கு கலிலீ என்று சொல்லப்படுகிற இஸ்ரேலின் கொண்டைப் பகுதியின் எல்லைக் கிராமங்களுள் ஒன்று, ஜரித் (Zarit). தம் பிடித்து இருபது நிமிஷம் ஓடினால், லெபனான் எல்லையைத் தொட்டுவிடமுடியும். அதிகபட்சம் அந்தக் கிராமத்தில் முந்நூறு பேருக்கு மேல் கிடையாது. அமைதியான, சாதுவான இடம். அங்கேதான் முதல் ராக்கெட் வந்து விழுந்தது. பீரங்கிகளை அழிக்கும் ராக்கெட்.

என்னவென்று இஸ்ரேலிய ராணுவத்தினர் திரும்பிப் பார்ப்பதற்குள் பத்து ராக்கெட்டுகள் வந்து மோதி வெடித்தன. உடனடியாக, இஸ்ரேல் ராணுவ முகாம்களில் அபாய மணிகள் அலற ஆரம்பித்தன. அத்தனை எல்லையோர செக் போஸ்ட்களுக்கும் அலர்ட் ஆகும்படி அறிவிப்பு பறந்தது. குளித்துக்கொண்டோ, சாப்பிட்டுக்கொண்டோ இருந்த மேஜர்களையும் லெஃப்டினெண்டுகளையும் அப்படியே அள்ளியெடுத்து ஜீப்புகளில் போட்டுக்கொண்டு விரைந்தார்கள்.

இதெல்லாம் நடந்துகொண்டிருந்த சில நிமிட இடைவெளிகளுக்குள்ளாகவே, அடுத்தடுத்து பத்துப் பத்தாக ராக்கெட்டுகள் சீறி வந்து இஸ்ரேலிய ராணுவ முகாம்களைக் குறிவைத்துத் தாக்கின.

கத்யூஷா (Katyusha). அதுதான் ஹிஸ்புல்லாவிடம் இருக்கும் ராக்கெட் லாஞ்சரின் பெயர். இரண்டாம் உலகப்போர் சமயத்தில், சோவியத் யூனியன் உற்பத்தி செய்த ராணுவத் தளவாடங்களுள் ஒன்று. நிற்க வைத்து, ஒரே சமயத்தில் பத்து ராக்கெட்டுகளைக் கண்ணியில் பொருத்தி அடித்தால் சர், சர் என்று திகிலூட்டும் சப்தமுடன் சீறிப்பாய்ந்து தாக்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தை இலக்காக நிர்ணயித்துவிட்டால் போதும். பாயும் பத்து ராக்கெட்டுகளும் ஏரியாவைத் தமக்குள் பிரித்துக்கொண்டு போய் வஞ்சனையில்லாமல் நாசம் செய்யும்.

கடந்த ஜூலை பன்னிரண்டாம் தேதி காலை ஆரம்பித்த ஹிஸ்புல்லாவின் அந்தத் திடீர்த் தாக்குதல், முதலில் முக்கால் மணி நேரம் மட்டுமே நீடித்தது. இஸ்ரேல் துருப்புகளும் பதிலுக்குத் தற்காப்புத் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்க, அங்கொன்றும் இங்கொன்றுமாக இஸ்ரேலியர்கள் மொத்தம் எட்டுப்பேர் கொல்லப்பட்டுவிட்ட செய்தி, காலை பத்தேகாலுக்குத் தெரியவந்தது.

அதிர்ந்துவிட்டது இஸ்ரேல் அரசு. முழு வேகத்தில் பதில் தாக்குதலைத் தொடங்குவதற்காக, அவசர அவசரமாக ராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சரவை மட்டத்திலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தக் கூட்டங்கள் நடந்து முடிந்து ஒரு தீர்மானத்துக்கு வருவதற்குள், ஹிஸ்புல்லாவின் இரண்டாம் கட்ட நடவடிக்கை தொடங்கிவிட்டது. இலக்கு, ராணுவ முகாம்தான். எதிரியைச் சிந்திக்கவிடாமல் தொடர்ந்து நாலாபுறங்களிலிருந்தும் துப்பாக்கிகளால் சுட்டபடியே உருண்டு உருண்டு முன்னேறி, ஜரித் அவுட் போஸ்ட் அருகே இருக்கும் ராணுவ முகாமை நெருங்கினார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில், அங்கே காவலுக்கு இருந்த இஹுத் கோல்ட்வாஸர் (Ehud Goldwasser), எல்தாத் ரெகெவ் (Eldad Regev) என்கிற ராணுவச் சிப்பாய்கள் இரண்டு பேரைக் கோழி அமுக்குவதுபோல அமுக்கிப் பிடித்தார்கள். எங்கிருந்தோ பறந்துவந்த ஒரு வேனில் தூக்கிப் போட்டுக்கொண்டு, கண்மண் தெரியாமல் வண்டியைச் செலுத்திக்கொண்டு காணாமல் போனார்கள்.

அதுவரை அத்துமீறல், ஊடுருவல், தாக்குதல் முயற்சி, பதில் தாக்குதல் நடவடிக்கை என்று எளிய சொற்களால் வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருந்தது, அந்தக் கணத்திலிருந்து ஒரு முழுநீள யுத்தமாகப் பரிணாம வளர்ச்சி கண்டது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், இஸ்ரேலிய ராணுவ டாங்குகள், லெபனானின் தெற்கு எல்லை முழுவதும் அணிவகுத்து நின்றன. டெல் அவிவ் ராணுவ விமானத் தளத்திலிருந்து புறப்படுவதற்குத் தயாராக, இருபது போர் விமானங்கள் பெட்ரோல் நிரப்பிக்கொண்டன. மத்தியத் தரைக் கடல் பகுதியில் ரோந்து போய்க்கொண்டிருந்த இஸ்ரேலிய கடற்படைக் கப்பல்கள் அனைத்திலும், ஆயுதங்கள் ஏற்றப்பட்டு லெபனானை நோக்கி அனுப்பப்பட்டன.

2006 ஏப்ரல் 14 அன்றுதான் இஹுத் ஓல்மர்ட் (Ehud Olmert) இஸ்ரேலியப் பிரதமராகப் பொறுப்பேற்றிருந்தார். முன்னதாக, ஏரியல் ஷரோனுக்கு உடம்பு சரியில்லாமல் போய் பதவி விலகியதுமே (ஜனவரி 4-ம் தேதி முதல்) இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்பட்டவர்தான் என்றாலும், மூச்சுவிடக் கூட அவகாசமில்லாமல் ஒரு முழு நீள யுத்தத்துக்கு அவர் தயாராக வேண்டியிருந்தது.

ஹிஸ்புல்லாவுடன் யுத்தம் என்று பெயர். இலக்கு லெபனான்தான். தமிழ்நாட்டின் பரப்பளவில் பத்தில் ஒரு பங்கு அளவே இருக்கும் (சுமார் 10,450 சதுர கிலோமீட்டர்) லெபனான் முழுவதையும் துவம்சம் பண்ணிவிடுவதுதான் இலக்கு.

இஹுத் ஓல்மர்ட்டுக்கும் இஸ்ரேலிய அதிகாரிகள் அத்தனை பேருக்கும் மிக நன்றாகத் தெரிந்த விஷயம் அது. லெபனானை வீழ்த்துவது பெரிய காரியமே அல்ல. அது ஒரு கொசு. ஒரு

ராத்திரியில் யுத்தம் முடிந்துவிடும். ஆனால் எல்லை காக்கும் ஐயனார் மாதிரி, தேசத்தின் தெற்கு வாசல் முழுவதையும் காவல் காக்கும் ஹிஸ்புல்லா போராளிகள் குறுக்கே இருக்கிறார்கள். லெபனான் ராணுவத்தினரைவிட, பலம் பொருந்தியவர்கள். அத்தனை பேரும் கெரில்லா போராளிகள். யுத்த தந்திரங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்கள். இஸ்ரேலை மட்டுமல்ல; அமெரிக்காவையே பல சமயங்களில் கண்ணில் விரல் விட்டு ஆட்டியவர்கள். எங்கே பதுங்கியிருக்கிறார்கள், எப்படி வெளியே வருகிறார்கள், எப்படித் தாக்குகிறார்கள் என்பதே புரியாமல், அடித்து நொறுக்கிவிட்டுப் போய்விடும் போர்க்களப் பேய்கள்.

ஹிஸ்புல்லாவின் ஆள் கடத்தலைச் சாக்காக வைத்து, லெபனான் மீது தொடுக்கவிருக்கும் யுத்தம்தான் என்றாலும், சமாளிக்கவேண்டியது ஹிஸ்புல்லாவைத்தான். அவர்களுக்குப் பின்னணியில் நின்றுகொண்டு லெபனான் அரசு உதவி செய்யும். முன்னணிக்கு வந்தே ஈரான் உதவி செய்யும். சிரியா உதவும். சொல்வதற்கில்லை. இன்னும் பல அரேபிய தேசங்களும் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கலாம். போர் நிறுத்தம், அமைதி உடன்படிக்கை என்று பத்திருபது நாட்கள் கழித்துப் பேச ஆரம்பிப்பதற்குள்ளாகக் கணிசமான சேதத்தை அத்தேசத்தில் ஏற்படுத்திவிட முடிந்தால் தேவலை. கொஞ்சம் நிலப்பரப்பையும் அபகரிக்க முடிந்தால் உத்தமம். தாமதிக்க ஒன்றுமில்லை. அடிக்க ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்து உத்தரவிட்டார் இஸ்ரேல் பிரதமர்.

அதேசமயம், இஸ்ரேலிய ராணுவத் தளபதி லெஃப்டினெண்ட் ஜெனரல் டான் ஹலூட்ஸ் (Dan Halutz) சேனல் 10 என்கிற தொலைக்காட்சிக்கு ஒரு பேட்டியளித்துக்கொண்டிருந்தார். "அவர்கள் கடத்திப்போன இரண்டு ராணுவ வீரர்களும் பத்திரமாகத் திரும்பிவராவிட்டால், லெபனான் இருபது வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமைக்கு மீண்டும் போய்விட நேரும், ஜாக்கிரதை!" என்கிற அவரது மிரட்டல் எச்சரிக்கை, வெளிப்பார்வைக்கு ஒரு ராணுவ அதிகாரியின் பேச்சுபோல இல்லாதுபோனாலும், ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் தலைமைக்கும் அப்படிப்பட்ட மொழிதான் புரியும் என்பது அவரது திடமான முடிவு.

இருபது வருடங்களுக்கு முன்பு, லெபனான் எப்படி இருந்தது என்பதையெல்லாம் நிதானமாகப் பார்த்துக்கொள்ளலாம். இந்த மிரட்டலுக்கும் யுத்த ஆயத்தங்களுக்கும் ஹிஸ்புல்லா சற்றும் அசரவில்லை என்பதுடன், உடனடியாகத் தானும் ஒரு முழு யுத்தத்துக்குத் தயாராகிவிட்டது என்பதுதான் இங்கே முக்கியம்.

பன்னிரண்டாம் தேதி இரவு வரை ஓயாமல் பிராந்தியத்தில் குண்டுச் சப்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. இஸ்ரேலியத் தரைப்படை வீரர்கள் ஓரடி கூட முன்னேற முடியாமல், அரண் மாதிரி ஹிஸ்புல்லா போராளிகள் எல்லையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். 'நீ ஓரடி முன்னால் எடுத்துவைத்தால், நான் பத்து ராக்கெட்டுகளை உன்னை நோக்கி அனுப்புவேன், என்பதுதான் ஹிஸ்புல்லாவின் யுத்த சித்தாந்தம்.

அன்று முழுவதும் தரைப்படைகள்தாம் மோதிக்கொண்டன. மறுநாள் பொழுது விடிந்ததும், இஸ்ரேலிய ராணுவத்துக்குச் சொந்தமான போர் விமானங்கள், பெய்ரூத்தை நோக்கிச் சீறத் தொடங்கின. அவர்களது முதல் இலக்கு, லெபனான் சர்வதேச விமான நிலையம். பெய்ரூத்திலிருந்து சற்றுத்தொலைவில் இருந்த விமான நிலையத்தைக் குறிவைத்து, இஸ்ரேலிய குண்டுகள் பறந்துவந்து விழுந்து வெடித்தன. விமானங்களிலிருந்து கண்ட்ரோல் ரூமுக்கு எச்சரிக்கை வந்தது. விமான நிலையத்தை உடனடியாக மூடவும். எந்த வெளி தேசத்து விமானமும் இந்தக் கணம் முதல் இங்கே வந்து இறங்கக்கூடாது. மீறினால் விளைவுகளுக்கு இஸ்ரேல் பொறுப்பல்ல.

மறுபுறம், லெபனானின் கிழக்குக் கடல் எல்லையைச் சுற்றி வளைத்து நின்ற இஸ்ரேலின் போர்க் கப்பல்களிலிருந்து செலுத்தப்பட்ட ஏவுகணைகள், பெய்ரூத் டெமஸ்கஸ் (சிரியாவின் தலைநகரம்) நெடுஞ்சாலையை நாசப்படுத்தும் காரியத்தில் மும்முரமாக இறங்கின. நெடுஞ்சாலைப் போக்குவரத்து

உடனே நிறுத்தப்பட்டது. லெபனானின் தெற்குப் பகுதி நகரங்கள், கிராமங்கள் அனைத்திலும் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கடைகள், வர்த்தக மையங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. ஒரு வினாடிகூட இடைவெளியில்லாமல் ராக்கெட்டுகள் இருபுறமும் சீறிப் பறந்து வெடித்தன. இஸ்ரேலியப் போர் விமானங்கள் இலக்கில்லாமல் தெற்கு லெபனானில் பல்வேறு கட்டடங்கள் மீது குண்டு மழை பொழிந்தன. உதிரும் சீட்டுக்கட்டுகள் போல வானளாவிய கட்டடங்கள் நொறுங்கிச் சரிந்தன. சாலைகள் அனைத்தும் பதுங்கு குழிகள் போல் ஆயின. நெருப்பும் புகையும் விண்ணைத் தொட்டன. எங்கும் அவலச் சப்தம். உயிரை எடுத்து இடுப்பில் முடிந்துகொண்ட லெபனான் மக்கள், போக்கிடம் இல்லாமல் அங்குமிங்கும் தப்பித்து ஓடினர்.

எத்தனை குழந்தைகள்! எத்தனை வயதானவர்கள்! மகனை இழந்த பெற்றோர்கள், மனைவியை இழந்த கணவர்கள், உறவினர்கள் கண்ணுக்கு முன்னால் குண்டடி பட்டுத் துடிதுடித்துச் சாவதைப் பார்த்தும் உதவ முடியாமல், தம் உயிரைக் காத்துக்கொள்ள ஓடி ஒளிந்த பொதுமக்கள்! ரத்தமும் கண்ணீரும் பயமும் மிரட்சியுமாகக் கழிந்த தினங்கள்.

ஆனால் லெபனானில் ஒருத்தராவது, உன்னால்தானே இதெல்லாம் என்று ஹிஸ்புல்லாவைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கமாட்டார்கள். அரசுக்கு இல்லாத அக்கறை உனக்கு எதற்கு என்று சட்டையைப் பிடிக்கமாட்டார்கள். இழந்த உயிர்களை எப்படித் திருப்பித் தருவாய் என்று தமிழ் சினிமாக் கதாநாயகியர் போல சென்டிமெண்ட் வசனம் பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள்.

காரணம், ஹிஸ்புல்லா அவர்களுக்குத் தீவிரவாத இயக்கமல்ல. ஒரு காவல் தெய்வம். ஹிஸ்புல்லாவுக்கு ஓர் அரசியல் பிரிவு உண்டு. லெபனான் நாடாளுமன்றத்தில் பதினான்கு சீட்டுகள் வைத்திருக்கும் ஒரு வலுவான கட்சியும் கூட. இன்னொரு பக்கம், ஏராளமான கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், விவசாய இயக்கங்களை நடத்தும் மக்கள் பணியாளன்.

லெபனான் பிரதமர் ஃபாத் சினியோராவும் (Faud Siniora) அவரது அரசும் அதிகாரிகளும் தராத பாதுகாப்பைத் தங்களுக்கு ஹிஸ்புல்லாதான் தருவதாக லெபனான் மக்கள் நம்புகிறார்கள்.

நம்புவது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால் இதுதான் உண்மை. ஹிஸ்புல்லாவைப் புரிந்துகொண்டுவிட்டால். மத்தியக் கிழக்கு நாடுகளின் மொத்தப் பிரச்னையுமே முழுக்கப் புரிந்துவிட்டதாகத்தான் அர்த்தம்.